1993 ஏப்ரல் 21]

அந்தச் செடிகளை யார் உரிய முறையில் வளர்ப்பார்கள் அல்லது நல்ல முறையில் பராமரிப்பார்கள் என்று பார்க்காமல், யாருக்கு வேண்டுமானாலும் கொடுக்கும் நிலைமை இருக்கிறது. ஆகவே அந்தச் செடிகளை நல்ல தரமுள்ளதாகவும், அதை வளர்த்து ஒழுங்காகப் பராமரிக்கக்கூடியவர்களுக்கும் கொடுப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தோட்டக்கலைப் பண்ணையில் தனிப் பயிற்சி பெற்ற தொழில்நுட்ப அலுவலர்கள் கண்காணிப்பில் தான் உற்பத்தி செய்து, நாற்றுகள் வழங்கப்படுகின்றன. சில இடங்களில் சாலைகளில் கூட தள்ளு வண்டிகளில் வைத்து பல பழச் செடிகள், மலர்ச் செடிகளை விற்கிறார்கள். மக்கள் ஏமாந்து, அவற்றை வாங்கி விடுகிறார்கள், எனவே யார் தகுதி படைத்தவர், யார் நன்றாக வளர்ப்பார்கள் என்று பார்க்க முடியாது. விரும்பி இந்தத் துறைக்கு விவசாயிகள் வருவார்கள் என்று சொன்னால், அவர்களுக்கு அரசு தரமான செடிகளை மானிய விலையில் வழங்கிக் கொண்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 418, திரு. கே. கந்தசாமி, இருக்கையில் இல்லை. திரு. வெ. தமிழரசு கேட்கிறார்.

மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்.

418—

மலைவாழ் கிராமங்களுக்கு சூரிய ஒளி மூலம் தெருவிளக்கு வசதி

*10562—திரு. கே. கந்தசாமி:

மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மலைவாழ் கிராமங்களுக்கு சூரிய ஒளி மூலம் (Solar Energy) தெருவிளக்குகள் எரியச் செய்யப்படுகிறதா?

(ஆ) ஆம் எனில், சேலம் மாவட்டத்தில் எத்தனை கிராமங்களில் இந்த வசதி செய்து கொடுக்கப்பட்டுள்ளது?

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே—

(ஆ) ஆம்.

(ஆ) சேலம் மாவட்டத்தில் சூரிய ஒளி மூலம் தெரு விளக்குகள் பொருத்தி மொத்தம் 26 பெரிய கிராமங்களுக்கும், 95 குக்கிராமங்களுக்கும் மின் வசதி செய்யப்பட்டுள்ளது.

1993 ஏப்ரல் 21

முற்பகல் 11.00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன் அனுமதியோடு வினாக்கள்—விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது. திரு. வெ. தமிழரசு.

திரு. வெ. தமிழரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த சோலார் எனெர்ஜி தெருவிளக்குகள் எனது ஆத்தூர் தொகுதியில் சின்னகல்ராயன்மலையில் மிகச் சிறப்பாகச் செயல்படுகிறது. அதற்காக நம்முடைய இதயதெய்வம் டாக்டர் புரட்சித்தலைவி அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த மலைவாழ் மக்கள் கிராமங்களான அடுத்தடுத்த கிராமங்களுக்கும் எனது தொகுதியில் இது வழங்கப்படுமா என்பதைப் பணிவோடு கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. எம். ஆனந்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதுபற்றிய குறிப்புகளை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தந்தால் நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 419. திரு. கே. செல்வராஜ் இருக்கையில் இல்லை. (குறுக்கீடு) திரு. கே. பி. ராஜு, கேட்கிறார். மாண்புமிகு பிற்பட்டோர் நலன் மற்றும் மீனளத்துறை அமைச்சர்.

419——

மானியக் கடனில் தனியார் இறால் மீன் வளர்த்து வியாபாரம் செய்ய உதவித் தொகை.

*11282—திரு. கே. செல்வராஜ்:

மாண்புமிகு பிற்பட்டோர் நலன் மற்றும் மீனளத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானியக் கடனில் தனியார் இறால் மீன் வளர்த்து வியாபார முறையில் செயல்பட அரசு உதவுகிறதா?

(ஆ) ஆம் எனில், எவ்வளவு தொகை அரசு அளிக்கிறது?

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார், பிற்பட்டோர் நலன் மற்றும் மீனளத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவை தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) ஹெக்டேர் ஒன்றுக்கு ரூபாய் 30,000 உச்சமானியமாக வழங்கப்படுகிறது.